இயல்-5 வகுப்பு - ஆறு

செய்யுள்-ஆசாரக்கோவை

II. குறுவினா:

1.எந்த உயிருக்கும் செய்யக் கூடாதது எது?

எந்த உயிருக்கும் செய்யக் கூடாதது துன்பமாகும்.

2.நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?

நற்பண்பு உடையவரோடு நாம் நட்புக் கொள்ள வேண்டும்.

II. சிறுவினா:

1.ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?

* பிறர் செய்த உதவியை மறவாதிருத்தல்.
*பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளுதல்.
* இனியச் சொற்களைப் பேசுதல்.
* எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருத்தல்.
* கல்வி அறிவு பெறுதல்.
* எல்லோரையும் சமமாகப் பேணுதல்.
* அறிவுடையவராய் இருத்தல்.
* நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ளுதல்.

ஆகிய எட்டும் நல்லொழுக்கத்தை விதைக்கும் விதைகள் ஆகும்.

**செய்யுள்**

**கண்மணியே கண்ணுறங்கு**

I. **குறுவினா:**

1.இப்பாடலில் குறிப்பிடும் மூன்று நாடுகள் யாவை?

*சேரநாடு
*சோழநாடு
*பாண்டியநாடு

2.நமது வீட்டிற்கு வந்தவரை உபசரிக்கும் முறையாக நாட்டுபுற பாடல் கூறுவது யாது?

வீட்டிற்கு வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று அறுசுவை உணவளிக்க வேண்டும்.

3.தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறாள்?

தமிழ்ச் சோலையில் பூ எடுத்து, இசையுடன் பாடி உலகம் புகழ வந்தாயோ! தங்கப் பூ பதித்த தந்தத்தால் ஆனத் தொட்டிலில் செல்லமாய் உறங்க வந்த சேரநாட்டின் முத்தேனோ! இல்லம் வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று அறுசுவை உணவளிக்கும் சோழ நாட்டின் முக்கனியோ! குளம் வெட்டி,அணை கட்டிக் குடிமக்களின் பசியைப் போக்கும் பாண்டி நாட்டின் முத்தமிழோ! கண்ணே கண்மணியே கண்மூடி உறங்குவாயாக!

## திருக்குறள்

**I. குறுவினா:**

1.எப்படி உண்பது விரும்பத்தக்கது அன்று?

அமிழ்தமே ஆனாலும் விருந்தினர் இருக்கும் போது தான்மட்டும் உண்பது விரும்பதக்கது அன்று.

2. எது தீமையானது என்று வள்ளுவர் கூறுகின்றார்?

அடுத்தவர் பொருளைக் களவாடலாம் என உள்ளத்தால் நினைப்பது கூடத் தீமையானது.

3.ஆக்கம் யாரிடம் வழிகேட்டுச் செல்லும்?

தளராத ஊக்கம் உடையவனிடம் ஆக்கமானது தானே வழிகேட்டுக் கொண்டு செல்லும்.

4. நாம் எத்தகைய சொற்களைப் பேசவேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்?

பயனுடைய சொற்களை மட்டுமே பேசுக. பயன் இல்லாத சொற்களைப் பேசாமல் விட்டு விடுக. என்று வள்ளுவர் கூறுகின்றார்.

## உரைநடை

## தமிழர் பெருவிழா

**I.குறுவினா:**

1.போகிப்பண்டிகை எதற்காகக் கொண்டாடப் படுகிறது?

“பழையன கழிதலும் புதியன புகுதலும்”

(நன்னூல் நூற்பா-467) என்பது ஆன்றோர் மொழி.வீட்டில் உள்ள பயனற்ற பொருட்களை நீக்கி வீட்டைத் தூய்மை செய்வதற்காக கொண்டாடப்படுகிறது.

2. உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்றி செலுத்துகின்றனர்?

மாடுகள் உழவர்களின் செல்வமாக மதிக்கப்படுகின்றன.மாடு என்ற சொல்லுக்கு செல்வம் என்னும் பொருள் உண்டு. உழவுக்கும் உழவர்க்கும் உற்றத் துணையாக மாடுகள் விளங்குவதால் உழவர்கள் மாடுகளுக்கு நன்றி செலுத்துகின்றனர்.

## II. சிறுவினா:

1.காணும் பொங்கலை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்?

மாட்டுப் பொங்கலுக்கு அடுத்த நாள் காணும் பொங்கல் ஆகும். இந்நாளில் உற்றார் உறவினர் மற்றும் நண்பர் வீடுகளுக்குச் சென்று அவர்களைக் கண்டு மகிழ்வர். குடும்பத்தினருடன் விரும்பிய இடங்களுக்குச் சென்று மகிழ்வுடன் பொழுதைக் கழிப்பர். மேலும் பட்டிமன்றங்கள், கலைநிகழ்ச்சிகள் முதலியவற்றை நடத்துவர். விளையாட்டுப் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றோருக்குப் பரிசுகளை வழங்கிப் பாராட்டுவர்.

# துணைப்பாடம்

# மனம் கவரும் மாமல்லபுரம்

## I. வினா விடை:

1.மாமல்லபுரத்தில் காணவேண்டிய இடங்கள் யாவை?

* அர்ச்சுனன் தபசு
* கடற்கரைக் கோயில்
* பஞ்சபாண்டவர் இரதம்
* ஒற்றைக்கல் கோயில்
* புலிக்குகை
* திருக்கடல்மல்லை
* கண்ணனின் வெண்ணெய்ப் பந்து
* கலங்கரைவிளக்கம்

2.சிற்பக்கலை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

சிற்பக்கலை நான்கு வகைப்படும் அவை

* குடைவரைக் கோயில்கள்
* ஒற்றைக்கல் கோயில்கள்
* கட்டுமானக் கோயில்கள்
* புடைப்புச் சிற்பங்கள்

3.மாமல்லபுரம் பெயர்க்காரணம் தருக.

*நரசிம்மவர்மன் மற்போரில்சிறந்தவன்

*அதனால் மாமல்லன் எனப் போற்றப்பட்டான்

*மாமல்லனின் கேள்வியால் எழுந்த ஊர் என்பதால் மாமல்லபுரம் என்று வழங்கப்பட்டது.

4.அர்ச்சுனன் தபசு என அங்குள்ள பாறைக்கு பெயர் வழங்கக் காரணம் என்ன?

அர்ச்சுனன் தவம் செய்யும் காட்சி, பாறையில் உள்ளதால் அப்பாறைக்கு அர்சுனன் தபசு எனப் பெயர் வழங்கப்பட்டது.

5. மாமல்லனின் தந்தை பெயர் என்ன?

மாமல்லனின் தந்தை பெயர் மகேந்திர பல்லவன் என்பதாகும்.

## இலக்கணம்

## மயங்கொலிகள்

**I. நிரப்புக:**

**1.**மனம் என்பதன் பொருள் **உள்ளம்**

2.உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே வேறுபாடு உள்ள ஒலிகளை **மயங்கொலிகள்** என்கிறோம்.

3.மயங்கொலி எழுத்துகள் மொத்தம் **எட்டு.**

**4.**மயங்கொலி எழுத்துகள் **ண,ன,ந,ல,ள,ழ,ர,ற.**

**5.**'ட' என்னும் எழுத்துக்கு முன் **ண் வரும்.**

**6.**'ற' என்னும் எழுத்துக்கு முன் **ன்** வரும்.

II.**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1.**சிரம் என்பது **தலை** (தலை/தளை).

2.இலைக்கு வேறு பெயர் **தழை**(தளை/தழை).

3.வண்டி இழுப்பது **காளை** (காளை/காலை).

4.கடலுக்கு வேறு பெயர் **பரவை** (பரவை/ பறவை)

5.பறவை வானில் **பறந்தது**.(பரந்தது/பறந்தது.)

6.கதவை மெல்ல **திறந்தான்**(திறந்தான்/திரந்தான்)

7.பூ **மணம்** வீசும்.(மனம்/மணம்)

8.புலியின் **கண்** சிவந்து காணப்படும்.(கன்/கண்)

9.குழந்தைகள் **பந்து** விளையாடினர்.(பந்து/பன்து)

10.வீட்டு வாசலில் **கோலம்** போட்டனர்.(கோலம்/கோளம்)